

# ஆடு வளர்ப்பு

ஆடு வளர்ப்பு என்பது சிறு விவசாயிகள் முதல் அனைவருக்கும் ஒரு பொருளாதாரத்தை அதிகரிக்கக்கூடிய ஒரு தொழிலாகும்.

கிராம பகுதிகளில் உள்ள பெரும்பாலானோர் ஆடு வளர்ப்பையே முதன்மை தொழிலாகவும் கொண்டுள்ளனர். அதாவது மிகவும் வளம் குன்றிய பகுதிகளில், அந்த சூழ்நிலையில் வளரும் செடிகள் மற்றும் மரங்களை கொண்டு ஆடுகளை வளர்க்கலாம். மலை மற்றும் குன்று பகுதிகளில் ஆடுகள் அதிகம் வளர்க்கப்படுகின்றன. விவசாயத்தில் ஆடு வளர்ப்பு என்பது கூடுதல் வருமானம் தருகிறது.

## ஆடு வளர்ப்பதினால் ஏற்படும் நன்மைகள்



ஆடு வளர்க்க முதலீடு என்பது மிகவும் குறைவாக உள்ளதால், எளிமையாக ஆடு வளர்ப்பை மேற்கொள்ளலாம்.

ஆடுகளின் உடல் அமைப்பு, அவற்றின் இயல்பு நிலை போன்றவற்றினால் அவற்றை வளர்ப்பதில் எவ்வித சிக்கல் களும் கிடையாது. மேலும் ஆடுகள் மனிதனிடம் நண்பனாக பழகும் தன்மையுடையது.

ஆடுகள் விரைவில் இன விருத்தி அடைந்து, ஒரு ஈற்றில் 2 அல்லது 3 குட்டிகளை ஈனுவதால் அவற்றின் மூலமும் எளிதில் லாபம் அடையலாம்.

ஆடுகளின் பாலில் அதிகளவு மருத்துவ குணம் உள்ளதால், பால் மூலமும் நல்ல வருமானம் பெறலாம்.

வறட்சி நிலவும் பகுதிகளிலும் ஆடுகளை எளிதாக வளர்த்து லாபம் பெறலாம்.

ஆட்டுப்பண்ணைகளில், ஆடுகள் மற்றும் கிடா என இரண்டும் சரிவிகித மதிப்பு கொண்டவையாகத்தான் கருதப்படும்.

ஆடுகளின் இறைச்சிக்கு நம் நாட்டில் மிகப்பெரிய வரவேற்பு உள்ளதால் அதன் மூலம் அதிகமான வருவாய் ஈட்ட முடியும்.

### ஆடுகளின் வகைகள்

1. செம்மறி ஆட்டினங்கள்
2. வெள்ளாட்டினங்கள்

## செம்மறி ஆட்டினங்கள்



செம்மறியாடுகள் எல்லா தட்பவெப்ப சூழ்நிலைகளிலும் வளரும் தன்மை கொண்டவை ஆகும். இவை திறந்த வெளியில் மேயவிட்டும், இடவசதி குறைவாக உள்ள இடங்களில் பட்டிகளில் அடைத்தும் வளர்க்க ஏற்றவை. ஆடு வளர்ப்பு என்பது குறைந்த செலவில் அனைவருக்கும் அதிக இலாபம் தரும் தொழிலாக விளங்குகிறது.

## மேச்சேரி



இந்த இனமானது தமிழ்நாட்டின் சேலம், கரூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களிலும், தருமபுரி மாவட்டத்தின் ஒரு சில பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. நடுத்தர உடல் வடிவ அமைப்பைக் கொண்டது. இளம் பழுப்பு அல்லது பழுப்பு நிறத்துடன் வெண்திட்டுகளுடன் குட்டையான ரோமங்களுடனும் காணப்படுகிறது. இவ்வகை ஆடுகள், அகன்ற மார்பக பகுதியும், திடமான கால்களும் கொண்டவைகளாக காணப்படுகிறது. கிடாய், பெட்டை இரண்டிற்குமே கொம்புகள் இல்லை.

இவ்வகையான ஆடுகள் இறைச்சி உற்பத்திக்காகப் மட்டுமே பயன்படுகிறது. இதனுடைய வால் குட்டையாக காணப்படுவதுடன் சற்று மெலிதாகவும் காணப்படும். வளர்ச்சியடைந்த கிடா 34-36 கிலோ எடையுடன் காணப்படுகிறது.

பெட்டை ஆடுகள் 20-22 கிலோ எடையுடனும் இருக்கும். இவ்வின ஆடுகள் 15 முதல் 18 மாதங்களில் இனவிருத்திக்கு தயாராகி 5-6வருட காலம் வரை நல்ல உற்பத்தி திறன் கிடைக்கும். தனது ஆயுள் காலத்தில் தரமான 6 குட்டிகளை ஈனும் திறன் பெற்றவை ஆகும்.

## சென்னை சிவப்பு

இந்த இனமானது தமிழ்நாட்டின் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காணப்படுகின்றது.

இந்த ஆட்டு கிடாவின் கொம்புகள் சுருட்டையாக காணப்படும். மேலும் பெட்டை ஆடுகளுக்கு கொம்புகள் இருக்காது.

சில ஆடுகளுக்கு முன்நெற்றி, அடிவயிறு மற்றும் கால்களுக்கிடையில் வெண்மை நிறம் காணப்படும்.

சென்னை சிவப்பு கிடா 36கிலோ வரை எடையுடனும், பெட்டை ஆடுகள் 24கிலோ வரை எடையுடனும் காணப்படுகிறது.

பொதுவாக சென்னை சிவப்பு ஆடுகள் இறைச்சி உற்பத்திக்காக அதிகமாக பயன்படுகின்றது. சிவப்பு நிறம், இளம்சிவப்பு முதல் கரும் சிவப்பு நிறமாக காணப்படும்.



## இராமநாதபுரம் வெள்ளை

இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இந்த ஆடுகள் அதிகம் காணப்படுகின்றது. அதிலும் இந்த ஆடுகள் வெள்ளை நிறத்தில் காணப்படும்.

இந்த ஆட்டின் கால்கள் சிறியதாகவும், சற்று மெலிந்தும் காணப்படுகிறது.

வளர்ந்த கிடா 32 கிலோ வரை எடையுடனும், பெட்டை ஆடுகள் 23 கிலோ வரை எடையுடனும் இருக்கும். மேலும் இந்த ஆடுகளின் தலை மற்றும் கால் பகுதிகளில் கரும்புள்ளிகள் காணப்படுகிறது. இவை நடுத்தர உடலமைப்பைக் கொண்டது.

கிடாவுக்கு முறுக்கிய வளைந்த கொம்புகள் கானப்படுகிறது. இந்த இன பெட்டை ஆடுகளுக்கும் கொம்புகள் கிடையாது.



## கீழக்கரிசல்

கீழக்கரிசல் என்ற ஆட்டினம் தமிழ்நாட்டின் இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் காணப்படுகின்றது. இவைகள் முற்றிலும் இறைச்சி உற்பத்திக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

வால் சிறியதாகவும், மெலிந்தும் காணப்படும். இவ்வகை ஆடுகள் நடுத்தர உடலமைப்பைக் பெற்றிருக்கும். பெரும்பாலான ஆடுகளில் கீழ்தாடையில் தாடி காணப்படும்.

வளர்ந்த கிடா 29 வரை கிலோ எடையுடனும், பெட்டை ஆடுகள் 22 கிலோ வரை எடையுடனும் இருக்கும்.

கிடாவுக்கு தடித்த, முறுக்கிய கொம்புகளும், ஆடுகள் கருஞ்சிவப்பு நிறத்திலும் இருக்கும். தலை, வயிறு மற்றும் கால்களில் கருமைநிறம் காணப்படும்.



## வேம்பூர்

வேம்பூர் இனம் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தின் வேம்பூர், மேலக்கரந்தை, கீழக்கரந்தை, நாகலாபுரம் பகுதிகளிலும் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலும் காணப்படுகிறது.

இந்த ஆட்டின் வளர்ந்த கிடா 35 கிலோ வரை எடையுடனும், பெட்டை 28 கிலோ வரை எடையுடனும் காணப்படும்.

இவைசெம்மறிஆட்டிலேயேஉயரமான ஆடுகளாக காணப்படுகின்றன. இவையும் இறைச்சி உற்பத்திக்காக மட்டுமே பயன்படுகிறது.

வெள்ளை நிற உடலமைப்பும், அதில் சிவப்பு நிற புள்ளிகளும் இருக்கும். இவ்வகையான ஆடுகளுக்கு காதுகள் கீழ்நோக்கி காணப்படும். வால் குட்டையாகவும், சற்று மெலிந்தும் காணப்படும்.

